# 05. இசைவுச் சான்றிதழ் (காணி அபிவிருத்தி, காணி உபபிரிவிடல் அல்லது கட்டிடங்களின் கட்டுமானம்) செயல்வழிப்படம்

டிஜிரல்மயப்படுத்தல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் தகவல்கள்/பரிவர்த்தனைகள் (SMS/WhatsApp/e-mail)

சபையின் இணையத்தளத்தில் அல்லது முன்னலுவலகத்திலிருந்து விண்ணப்பம் பெற்றுக்கொண்டு ஆலோசனைகள் பிரகாரம் பூர்த்தி செய்த பின்னர், முன்னலுவலகத்திடம் ஒப்படைத்தல்.

பொறுப்பு: விண்ணப்பத்தாரி

↓

செவ்வையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்பட்டு செயலாக்க கட்டணங்களை அறவிடல், பற்றுச்சீட்டு மற்றும் தொடர் நடவடிக்கை இலக்கம் வழங்குதல், விண்ணப்பம் பொறுப்பேற்றல் மற்றும் களப் பரிசோதனைக்கு வருகை தருகின்ற திகதி விண்ணப்பத்தாரியிடம் அறிவித்தல்

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

↓

விண்ணப்பப்படிவம் விடய பொறுப்பு அலுவலர் மூலம் தொழில்நுட்ப அலுவலரிடம் சமர்ப்பித்தல்

பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

↓

களப் பரிசோதனைக்கு செல்கின்ற திகதியை விண்ணப்பத்தாரிடம் உறுதிப்படுத்தல்

பொறுப்பு: தொழில்நுட்ப அலுவலர்

↓

களப் பரிசோதனை மேற்கொண்டு, அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அறிக்கை சகிதம் கோவையை

பொறுப்பு: தொழில்நுட்ப அலுவலர்

↓

**விண்ணப்பம் சிபாரிசு செய்யப்பட்டதா?**

**இல்லை** →

பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளை அறிவிக்கல்

விடய பொறுப்பு அலுவலர்

↓

தேவைகளை பூர்த்தி செய்யப்பட்டதாக அறிவிக்கல்

பொறுப்பு: விண்ணப்பத்தாரி

(→ விண்ணப்பப்படிவம் விடய பொறுப்பு அலுவலர் மூலம் தொழில்நுட்ப அலுவலரிடம் சமர்ப்பித்தல்)

**ஆம்** →

இசைவுச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக தீர்மானமெடுத்தல்.

பொறுப்பு: திட்டமிடல் குழு

↓

**அங்கீகரிக்கப்பட்டதா?**

**ஆம்** →

இசைவுச் சான்றிதழ் முன்னலுவலகத்திடம் சமர்ப்பித்து, விண்ணப்பத்தாரியிடம் அறிவித்தல் மற்றும் ஆதன மதிப்பீட்டுக்காக வருமானப் பிரிவிடம் அறிவித்தல்

விடய பொறுப்பு அலுவலர்

↓

இசைவுச் சான்றிதழை விண்ணப்பத்தாரியிடம் ஒப்படைத்தல்: பொறுப்பு: முன்னலுவலக அலுவலர்

**இல்லை** →

அமைச்சரிடம் மேன்முறையீடு செய்தல்

பொறுப்பு: விண்ணப்பத்தாரி

செயலாற்றுகைச் சுட்டி

## 05. இசைவுச் சான்றிதழ் (காணி அபிவிருத்தி, காணி உபபிரிவிடல் அல்லது கட்டிடங்களை நிருமாணித்தல்)

### 1. அறிமுகம்

உள்ளூர் அதிகாரசபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்கின்ற எந்தவொரு வகையிலுமான கட்டுமானம் அல்லது காணி உபபிரிவிடல் அல்லது காணிகளை இணைத்தல் என்பதற்கு முன்னர் அதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமான விதிப்பாகும். அவ்வாறான அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்துடன் மேற்கொள்கின்ற கட்டுமானம் அல்லது அபிவிருத்தி பணிகளை பயன்படுத்துவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார சபையிடமிருந்து இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

“இசைவுச் சான்றிதழ் ” என்பதில் பொருள்படுவது யாதெனில், கட்டுமானமாகுமிடத்து அங்கீகரிக்கப்பட்ட திட்டம் மற்றும் அதற்கு ஏற்புடையதான அனுமதிப் பத்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக நிருமாணிக்கப்பட்டுள்ளதாகவும், காணி உபபிரிவிடல் அல்லது இணைக்கப்படுதல் என்பவற்றுக்காக வழங்கிய அனுமதிக்கமைவாக அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வழங்கப்படும் சான்றிதழாகும். அவ்வாறான இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உரிய கட்டிடம் வதிவிடத்திற்கு அல்லது வேறு பணிக்காக பயன்படுத்துவதற்கோ காணியாகுமிடத்து, அந்தக் காணியில் எந்தவொரு அபிவிருத்தி பணியோ மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும்.

ஏதேனும் கட்டுமானங்கள் தொடர்பானவிடத்து, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் மற்றும் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கட்டுமானங்களின் அனுமதிப்பத்திரங்களுக்கு இந்த இசைவுச் சான்றிதழ் ஏற்புடையதாகும்.

குறிப்பு: வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகும் ஏதேனும் பிரதேசமொன்றில் காணி உபபிரிவிடல் அல்லது காணிகளை இணைத்துக்கொள்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிதில்லை. அதன் காரணமாக அத்தகைய பிரதேசத்தில் காணி உபபிரிவிடல் பணிக்கு ஏற்புடையதாக இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் தேவை ஏற்படமாட்டாது.

### 2. சட்டத்துடனான அதிகாரம்

(அ) 268 ஆம் அதிகாரமான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் 15 ஆவது பிரிவு.

(M) 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டத்தில் 8 ஏ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2021 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகார சபையினது திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் VI ஆம் பகுதி.

### 3. தகைமைகள்

கட்டிடங்களின் நிருமாணிப்புகளாக இருக்குமிடத்து அங்கீகரிக்கப்பட்ட கட்டுமான அனுமதிப்பத்திரத்தினதும், கட்டிட திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு

அமைவாக கட்டுமானங்களைப் பூர்த்தி செய்திருத்தலும், காணி உபபிரிவிடல் அல்லது இணைப்புகளின் போது, வழங்கிய அனுமதிக்கமைவாக உரிய பணியை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## 4. கட்டணங்கள்

(அ) உள்ளூர் அதிகார சபையால் இந்தக் கட்டணம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பு: 1. உள்ளூர் அதிகார சபையால் இந்தக் கட்டணம் அச்சீட்டு செலவினங்களை தீர்த்துக்கொள்வதற்காக மட்டும் வரையறுக்கப்படும் வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

2. இயங்கலை முறையில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டணங்கள் அறவிடுதலாகாது.

(ஆ) நகர அபிவிருத்தி பிரதேசமொன்றில் மேற்கொண்ட ஏதேனும் கட்டுமானங்களுக்கு ஏற்புடையதாக இசைவுச் சான்றிதழ் வழங்கும் போது, அறவிடப்படும் செயலாக்க கட்டணம் 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் 2 ஆவது அட்டவணையில் காண்பிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

(இ) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகும் பிரதேசமொன்றில் மேற்கொண்ட ஏதேனும் கட்டுமானத்திற்கு ஏற்புடையதாக இசைவுச் சான்றிதழ் வழங்கும் போது அறவிடப்படும் செயலாக்க கட்டணம் சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலாகும்.

(ஈ) காணி உபபிரிவிடல் அல்லது இணைப்புகளுக்கான விண்ணப்பம் தொடர்பானவிடத்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக உள்ளூர் அதிகார சபையால் அறவிடப்படும் கட்டணங்கள் (செயலாக்க கட்டணங்கள்) 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் 2 ஆவது அட்டவணையில் குறிப்பிடும் வகையில் அமைதல் வேண்டும்.

குறிப்பு: நகர அபிவிருத்தி பிரதேசமொன்றுக்கு ஏற்புடையதாக இந்த கட்டணங்களில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளும் சட்டத்துடனான அதிகாரம், நகர அபிவிருத்தி விடய பொறுப்பு அமைச்சரிடம் உள்ளபடியால் அவ்வப்போது மேற்கொள்கின்ற திருத்தங்கள் தொடர்பாக அவதானத்துடன் இருத்தல் முக்கியமாகும். இந்த கட்டணங்களின் சுற்றினை பொதுமக்கள் பரிசீலிக்க முடியுமான வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

## 5. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

(அ) நகர அபிவிருத்தி பிரதேசமொன்றுக்கு ஏற்புடையதாகும் இசைவுச் சான்றிதழாகுமிடத்து, அபிவிருத்தியின் இயல்புக்கமைவாக ஏற்புடையதாகும் விண்ணப்பம் 2021 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளில் 1 ஆவது அட்டவணையில் "ஈ" படிவத்துடன், அதன்மூலம் கோரியுள்ள ஆவணங்கள் 3 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நபரால் வழங்கிய சான்றிதழுடன்

சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இந்த ஆவணங்கள் சபையின் இணையதளத்தில் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளத்தில் இயங்கலை மூலம் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.

(ஆ) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கு ஏற்புடையதாகும் பிரதேசமொன்றில் மேற்கொள்கின்ற கட்டுமானமாகுமிடத்து, இங்கு இணைப்பில் விண்ணப்பப்படிவம் மூலம் கோருதல் வேண்டும்.

## 6. விண்ணப்பிக்கும் மற்றும் இசைவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம்.

| திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் (முன்னலுவலகம் அல்லது சபையின் இணையதளத்தில்) | | விண்ணப்பத்தாரி |
| தகைமைகளைப் பெற்றுள்ள நபர்களால் சான்றுப்படுத்திய, செவ்வையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பொறுப்-பேற்றல், செயலாக்க கட்டணங்-களை அறவிடல், பற்றுச்சீட்டு-களை வழங்குதல், விண்ணப்பம் பொறுப்பேற்கப்படுதல் மற்றும் களப் பரிசோதனைக்கு வருகை தருகின்ற திகதி விண்ணப்-பத்தாரியிடம் அறிவித்தல் | விண்ணப்பம் பொறுப்பேற்ற திகதியில் | முன்னலுவலக அலுவலர் |
| வேண்டுகோளை விடய பொறுப்பு அலுவலர் மூலம் தொழில்நுட்ப அலுவலரிடம் சமர்ப்பித்தல் | விண்ணப்பம் பொறுப்பேற்ற திகதியில் | முன்னலுவலக அலுவலர் |

| திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| களப் பரிசோதனைக்கு வருகின்ற திகதியை உறுதிப்படுத்தும் அறிவிப்பு விண்ணப்பத்தாரியிடம் அனுப்பி வைக்கப்படுதல் | விண்ணப்பம் தம்மிடம் கிடைக்கப்பெற்றவுடன் | தொழில்நுட்ப அலுவலர் |
| களப் பரிசோதனை | விதிக்கப்பட்ட திகதி | தொழில்நுட்ப அலுவலர் |
| வேண்டுகோள் தொடர்பில் தமது அவதானிப்புகளும் பரிந்துரைகளுடனும் கூடிய கோவை திட்டமிடல் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக விடயபொறுப்பு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் | களப் பரிசோதனை திகதி | தொழில்நுட்ப அலுவலர் |
| தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரைகளுடன் வேண்டுகோளைக் கவனத்தில்கொண்டு அங்கீகரிக்கப்படுதல் | விதிக்கப்பட்டுள்ள திட்டமிடல் குழு திகதியில் | திட்டமிடல் குழு |
| இசைவுச் சான்றிதழ் தயாரித்து அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம் பெற்றுக்கொள்ளுதல். | திட்டமிடல் குழு கூடிய திகதியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் | விடயபொறுப்பு அலுவலர் |
| கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் முன்னலுவலகத்திடம் சமர்ப்பித்தல் மற்றும் ஆதனத்தின் வருடாந்த பெறுமதியை மதிப்பிடுவதற்காக வருமானப் பிரிவிடம் அறிக்கையிடப்பட்டு விண்ணப்பத்தாரியை அறிவுறுத்தல். | திட்டமிடல் குழு கூடிய திகதியிலிருந்து இரண்டு நாட்களுக்குள் | விடயபொறுப்பு அலுவலர் |

| திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| இசைவுச் சான்றிதழை விண்ணப்பத்தாரியிடம் அனுப்பி வைத்தல் | விண்ணப்பத்தாரி வருகை தந்தால், அந்த சந்தர்ப்பத்தில் அல்லது தபாலில் மற்றும் மின்அஞ்சல் ஆவண வடிவில் | முன்னலுவலக அலுவலர் |

## 7. கட்டுமான அனுமதிப்பத்திரத்தில் மற்றும் கட்டிடங்களின் திட்டத்தில் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து நடைமுறைத் திட்டம்

| திட்டம் | காலவெல்லை | அதிகாரம் |
|---|---|---|
| நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்று பதிவு செய்தல் | | தொழில்நுட்ப அலுவலர் |
| நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமாறு விண்ணப்பத்தாரியிடம் அறிவித்தல் | தொழில்நுட்ப அலுவலர் அறிக்கை கிடைத்தவுடன் | விடயபொறுப்பு அலுவலர் |
| அறிவிப்புக்கமைவாக செயலாற்றுவதை தவிர்த்துள்ளவிடத்து அது தொடர்பாக அறிவிக்கப்படுதல். | விதிக்கப்பட்ட திகதி கிடைத்தவுடன் | தொழில்நுட்ப அலுவலர் |
| அறிவிப்புக்கமைவாக செயலாற்றுவதை தவிர்க்கப்பட்டுள்ளவிடத்து அது தொடர்பாக அறிவிப்பு வழங்குதல். | அறிக்கை கிடைத்தவுடன் | விடயபொறுப்பு அலுவலர் |
| அறிவிப்புக்கமைவாக ஒழுங்கமையாதவிடத்து நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | அறிவிப்பு விதிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் உடனடியாக | நகர ஆணையாளர் / தவிசாளர் |

குறிப்பு: கட்டுமான அனுமதிப்பத்திரத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அதற்கு புறம்பாக கட்டுமானங்களை மேற்கொண்டுள்ள போது, மேற்கொண்டுள்ள மாற்றங்களை உள்ளடக்கி கட்டிட திட்டமொன்றை புதிதாக வரையப்பட்டு அதற்காக மீண்டும் அனுமதி மற்றும் கட்டுமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளாதவிடத்து அது அத்துமீறல் கட்டுமானமாக கவனத்தில்கொண்டு சட்டத்துடனான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

## 8. இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதவிடத்து அதற்கான விளைவுகள்

அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின்கீழ் மேற்கொண்ட ஏதேனும் அபிவிருத்தி பணியை பயன்படுத்துவதற்கு முன்னர், வழங்கிய அனுமதிப்பத்திரத்தின்கீழ் உரிய அபிவிருத்தி மேற்கொண்டுள்ளதாக இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாது, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாகாது. அத்தகைய சந்தர்ப்பத்தில், அதனை பயன்படுத்தலானது, அத்துமீறல் பயன்பாடாக கவனத்தில் கொண்டு செயலாற்றப்படும். அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட நேரிடும்.

இணைப்பு

**இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . .

திகதி: 20 . . . . . . . . . . . . . . . .

தவிசாளர்,

. . . . . . . . . . . . . . . . . . . . . பிரதேச சபை,

அன்புடையீர் ,

தங்களால் என்னிடம் வழங்கிய . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .ஆம் இலக்க மற்றும் 20 . . . . . . . . . . . . . . . . ஆம் திகதிய கட்டுமான அனுமதிப் பத்திரம் பிரகாரம் . . . . . . . . . . . . (அமைப்பை குறிப்பிடுக) . . . . . . . . . . . . மேற்கொள்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இசைவுச் சான்றிதழ் வழங்குமாறு நான் / நாங்கள் இத்தால் கேட்டுக்கொள்கின்றேன். / கேட்டுக்கொள்கின்றோம்.

02. கட்டுமான அனுமதிப் பத்திரத்திற்கு அமைவாகவே வேலை முடிவுறுத்தப்பட்டுள்ளது. / பின்வரும் மாற்றங்களுடன் வேலை முடிவுறுத்தப்பட்டுள்ளது. (தேவையற்ற வாக்கியங்களை வெட்டிவிடவும்)

மாற்றங்கள் தொடர்பான விபரங்கள்:

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . உரிமையாளரின்/ உரிமையாளரின் கையொப்பம்

(அலுவலக பயன்பாட்டுக்காக மட்டுமாகும்.)

கோவை இலக்கம்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

செலுத்தப்பட வேண்டிய செயலாக்க கட்டணம் ரூபா: . . . . .

பற்றுச்சீட்டு இலக்கம்: . . . . . . . . . . . . . . . திகதி: . . . . . . . . . . .

.

முன்னலுவலக அலுவலரின் கையொப்பம்: . . . . . . . . . . . . . . . . . . . . . திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . .